பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 12 2025 MONDAY - 7.15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

1. சுகாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்பு வரி மசோதா நாடாளுமன்றத்தில் இன்று நிறைவேறியது.

2. அங்கீகாரமற்ற டிஜிட்டல் கடன் செயலிகளை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. சத்திஷ்கடில் 12 மாவோயிஸ்ட்டுகள் இன்று சரணடைந்தனர்.

4. இந்திய - நேபாள கலாச்சாரத் திருவிழா, Lumbini-ல் இன்று தொடங்கியது.

5. Candidates செஸ் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் Praggnanandha தகுதி பெற்றுள்ளார்.

>>>>><<<<<

சுகாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்பு வரி மசோதா நாடாளுமன்றத்தில் இன்று நிறைவேறியது.

மக்களவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவிற்கு மாநிலங்களவை இன்று ஒப்புதல் அளித்தது.

>>>>><<<<<

வந்தே மாதரம், நாட்டின் வரலாற்றோடு தொடர்புடையது என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

மக்களவையில் இதுதொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், விடுதலைப் போராட்டத்திற்கு பெரிதும் உத்வேகம் அளித்தது வந்தே மாதரம் என்று குறிப்பிட்டார்.

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் மந்திர முழக்கமாக வந்தே மாதரம் உள்ளது என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

>>>>><<<<<

அங்கீகாரமற்ற டிஜிட்டல் கடன் செயலிகளை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், ரிசர்வ் வங்கி மற்றும் சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை ஆணையங்கள் இதனை கண்காணித்து வருவதாக தெரிவித்தார்.

அங்கீகாரம் பெற்ற கடன் செயலிகளின் பட்டியலை ரிசர்வ் வங்கி இணையதளத்தில் வெளியிட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் பெரிதும் அறியப்படாத சுற்றுலா தலங்களை மேம்படுத்துவதற்காக, நடப்பு நிதியாண்டில் ஆயிரத்து 900 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், தமிழகத்தின் மாமல்லபுரம் மற்றும் ராமேஸ்வரத்தின் சுற்றுலா மேம்பாட்டிற்காக கடந்த நிதியாண்டில் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக குறிப்பிட்டார்.

>>>>><<<<<

பிரதமரின், இல்லந்தோறும் சூரியமின்சக்தி திட்டத்தின் கீழ், 23 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் பயனடைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த மத்திய இணையமைச்சர் திரு. **Shripad Yesso Naik,** இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 23 சதவீதம் ஆகும் என்று குறிப்பிட்டார்.

நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் 35 லட்சம் வீடுகள் என்ற இலக்கு எளிதாக எட்டப்படும் என்றும் திரு. **Shripad Yesso Naik** தெரிவித்தார்.

>>>>><<<<<

இண்டிகோ விமான சேவை ரத்து செய்யப்பட்டதன் காரணமாக, விமானப் பயணத்திற்கான கட்டணங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், பயண தூரத்தின் அடிப்படையில் நான்கு கட்டண விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதன் செயலாக்கத்தை தமது அமைச்சகம் கண்காணித்து வருவதாகவும் திரு. ராம்மோகன் நாயுடு கூறினார்.

>>>>><<<<<

குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்திற்காக மத்திய அரசு 2 லட்சம் கோடி ரூபாயை மாநில அரசுகளுக்கு வழங்கியுள்ளதாக நீர்வளத்துறை இணையமைச்சர் திரு. சோமண்ணா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தின் கீழ் நாடுமுழுவதும் இதுவரை 15 கோடியே 75 லட்சம் வீடுகளுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

>>>>><<<<<

இலவச சமையல் எரிவாயு இணைப்பு திட்டத்தின் கீழ், 10 கோடியே 33 லட்சம் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், நடப்பு நிதியாண்டில் இந்த திட்டத்தின் கீழ் 25 லட்சம் இணைப்புகளை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

நாடு முழுவதும் 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின்கீழ், இதுவரை 99 புள்ளி ஒன்பது ஐந்து சதவீத கணக்கீட்டுப் படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, 50 கோடியே 95 லட்சத்துக்கும் மேற்பட்ட கணக்கீட்டு படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இவற்றில், 98 புள்ளி ஆறு ஒன்பது சதவீத கணக்கீட்டு படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

கரும்பு உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் வேளாண் வர்த்தகம் தொடர்பான உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கரும்பு உற்பத்தி 44 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.

>>>>><<<<<

உலக சுகாதார அமைப்பின் சார்பில் பாரம்பரிய மருத்துவம் தொடர்பான சர்வதேச உச்சிமாநாடு, புதுதில்லியில் வரும் 19ஆம் தேதி தொடங்கவுள்ளாக மத்திய ஆயுஷ் துறை இணையமைச்சர் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மூன்று நாட்கள் இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக தெரிவித்தார்.

நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்கவுள்ளதாகவும் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் கூறினார்.

>>>>><<<<<

நாணயங்கள் குறித்த தவறான தகவல்களை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்று ரிசர்வ் வங்கி கேட்டுக் கொண்டுள்ளது.

50 பைசா, 1, 2, 5, 10, மற்றும் 20 ரூபாய் நாணயங்கள் அனைத்தும் செல்லக்கூடியவை என்று ரிசர்வ் வங்கியின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த நாணயங்களை தயக்கமின்றி ஏற்றுக் கொள்ளுமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

கல்வி நிறுவனங்கள் மாணவிகள் மற்றும் பணிபுரியும் பெண்களுக்கான கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு, பல்கலைக் கழக மானியக் குழு வலியுறுத்தியுள்ளது.

தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பல்கலைக் கழக மானியக் குழுவின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மகளிர் மேம்பாட்டிற்கான தலைப்புகளின் கீழ் இந்த மாநாடு நடத்தப்பட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

சத்திஷ்கடில் 12 மாவோயிஸ்ட்டுகள் இன்று சரணடைந்தனர்.

Kumhi கிராமம் அருகே காவல்துறையினர் முன் இவர்கள் சரணடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அப்போது ஆயுதங்களையும் அவர்கள் ஒப்படைத்ததாக அவர் மேலும் கூறுகிறார்.

சரணடைந்தவர்களில் நக்ஸலட்டுகளின் முக்கிய நிர்வாகி ஒருவரும் இடம்பெற்றுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>><<<<<

ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில், தெலங்கானாவின் பங்களிப்பு, 10 சதவீதமாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு செயல்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.

ஹைதராபாதில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

அடுத்த 22 ஆண்டுகளுக்குள் இதனை எட்ட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. ரேவந்த் ரெட்டி தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்திய - நேபாள கலாச்சாரத் திருவிழா, Lumbini-ல் இன்று தொடங்கியது.

மூன்றாவது ஆண்டாக இந்த திருவிழா நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தியா - நேபாளம் இடையேயான கலாச்சாரப் பிணைப்பை எடுத்துரைக்கும் வகையில் இந்த திருவிழா நடைபெறுகிறது.

>>>>><<<<<

தைவான் திரைப்பட திருவிழா புதுதில்லியில் வரும் வெள்ளிக்கிழமை தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்த திரைப்பட திருவிழாவில், தைவான் திரைப்படங்கள் குறித்த விவாதங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

Candidates செஸ் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் Praggnanandha தகுதி பெற்றுள்ளார்.

லண்டன், ருமேனியா உள்ளிட்ட பல்வேறு சர்வதேச செஸ் போட்டிகளில் பட்டம் வென்றதன் அடிப்படையில் அவர் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள Candidates செஸ் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார்.

>>>>><<<<<

உலக கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டியின் 9 முதல் 16வது இடத்திற்கான ஆட்டத்தில், இந்தியா 3-1 என்ற கோல்கணக்கில் வேல்ஸ் அணியை வென்றது.

சிலியின் சாண்டியாகோவில் நடைபெற்ற இப்போட்டியில், Hina Bano, Sunelita Toppo மற்றும் Ishika தலா ஒரு கோல் அடித்தனர்.

>>>>><<<<<

இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான இரண்டாவது ஹாக்கி போட்டி இன்று கேப்டவுனில் நடைபெறுகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதல் ஆட்டத்தில் வெற்றிபெற்று, இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

>>>>><<<<<

முஷ்டாக் அலி கோப்பைக்கான டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், சௌராஷ்ட்ர அணிக்கு எதிராக 184 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் தமிழக அணி சற்றுமுன்வரை 11 புள்ளி இரண்டு ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 102 ரன் எடுத்துள்ளது.

அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த சௌராஷ்ட்ர அணி. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 183 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக விஷ்வராஜ் ஜடேஜா 70 ரன் எடுத்தார்.

சிலம்பரசன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

>>>>><<<<<